Australian Government
Immigration Assessment Authority

# குடிவரவு மதிப்பீட்டு அதிகாரத்தினைப் (Immigration Assessment Authority)பற்றி நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டிய விடயங்கள்

**குடிவரவு மதிப்பீட்டு அதிகாரம் (IAA) என்ன** செய்கிறது?

குடிவரவு மதிப்பீட்டு அதிகாரம் (IAA) எனும் அமைப்பு *புலப்பெயர்வு சட்டம் 1958' (சட்டம்)* –இன் கீழ் நிறுவப்பட்டுள்ளது. குடிவரவு மற்றும் எல்லைப் பாதுகாப்பு அமைச்சர் (அமைச்சர்) அவர்களால் மேற்கொள்ளப்பட்ட சில துரிதவழி செயல்பாட்டு முடிவுகளை மீள்பரிசீலனை செயவதற்கான அதிகாரத்தைக் கொண்டதொரு சுதந்திர அமைப்பாவோம் நாங்கள். துரித வழி விண்ணப்பதாரிகள் என்று அழைக்கப்படும் நபர்களுக்கு பாதுகாப்பு விசா வழங்க அமைச்சர் மறுப்பு தெரிவித்ததற்கு எடுக்கப்பட்ட முடிவுகளாகும் இவை. 13 ஆகஸ்ட்டு 2012-க்குப் பிறகு, ஆனால் 1 சனவரி 2014-க்கு முன்பு செல்லுபடியாகும் விசா இல்லாமல் நீங்கள் படகு மூலமாக அவுஸ்திரேலியாவிற்கு வந்து, அவுஸ்திரேலியாவில் பாதுகாப்பு விசாவுக்கு விண்ணப்பிக்க அமைச்சர் உங்களை அனுமதித்திருந்தால், நீங்கள் ஒரு துரிதவழி விண்ணப்பதாரியாவீர்கள். அமைச்சரால் குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ள ஒரு குழுவில் நீங்கள் அடங்கினாலும் நீங்கள் ஒரு துரித வழி விண்ணப்பதாரியாகலாம்.

IAA-வினால் மீள்பரிசீலனை செய்யப்படும் உரிமம் சில துரித வழி விண்ணப்பதாரிகளுக்குக் கிடையாது. பாதுகாப்பு விசா உங்களுக்கு மறுக்கப்பட்டால், IAA-வினால் மீள்பரிசீலனை செய்யப்படும் உரிமம் உங்களுக்கு இருக்கிறதா இல்லையா என்று உள்நாட்டு விவகாரங்கள் திணைக்களம் (திணைக்களம்) உங்களுக்குச் சொல்லும்.

துரித வழி விண்ணப்பதாரிகளிடமிருந்து IAA அமைப்பானது மீள்பரிசீலனை விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளாது. நீங்கள் ஒரு துரித வழி விண்ணப்பதாரியாக இருந்து, உங்களுக்குப் பாதுகாப்பு விசா மறுக்கப்பட்டு, மீள்பரிசீலனைக்கான உரிமம் உங்களுக்கு இருந்தால், உங்களது வழக்கினைத் திணைக்களம் தானாகவே எமக்குப் பரிந்துரைக்கும்.

**IAA அமைப்பு எவ்வகையான முடிவுகளை மேற்கொள்ளும்?**

IAA இரண்டு வகையான முடிவுகளை மேற்கொள்ளக்கூடும். பாதுகாப்பு விசா வழங்கக்கூடாது என்று திணைக்களம் எடுத்த முடிவினை நாங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடும், அல்லது, உதாரணத்திற்கு, நீங்கள் ஒரு அகதி என நாங்கள் அடையாளம் கண்டால், மேலதிகமாகக் கருத்தில் கொள்ளப்படுவதற்காக வழக்கினை நாங்கள் திணைக்களத்திற்கு அனுப்பக்கூடும். பாதுகாப்பு விசாக்கள் வழங்கும் அதிகாரம் IAA -வுக்கு இல்லை.

மட்டுப்படுத்தப்பட்ட சூழ்நிலைகளில் புதிய தகவல்கள் கருத்தில் கொள்ளப்படக்கூடும் என்பதைத் தவிர, மறுப்பிற்கான முடிவை எடுத்தபோது திணைக்களத்திற்கு முன்பாக என்ன தகவல்கள் இருந்தனவோ அவற்றை மட்டுமே நாங்கள் கருத்தில் கொள்வோம்.

திணைக்களத்தினால் உங்களது வழக்கு IAA -வுக்குப் பரிந்துரைக்கப்பட்டிருந்தால், எமது முடிவு மற்றும் எமது முடிவிற்கான காரணங்கள் உங்களுக்கு அறியத்தர நாங்கள் உங்களுடன் நேரடியாகத் தொடர்புகொள்வோம்.

பாதுகாப்பு விசாவிற்கான கட்டளை விதிகள் என்ன என்று சட்டத்தில் உள்ளது. பெரும்பான்மையான தருணங்களில், நீங்கள் ஒரு அகதியா என்பது, அல்லது, மாறாக, அவுஸ்திரேலியாவிலிருந்து இன்னொரு நாட்டிற்கு நீங்கள் அகற்றப்பட்டால் கணிசமான தீங்கிற்கு

ஆளாகும் அபாயம் உங்களுக்கு இருக்கிறதா என்பதைப் போன்றவையே பிரதானமான விடயங்களாகும்.

மற்ற குடும்ப அங்கத்தவர்கள் உங்களது விசா விண்ணப்பத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தால், உங்களது வழக்குகளை ஒன்றுசேரக் கருத்தில் கொள்ள நாங்கள் முயற்சிப்போம்.

**மீள்பரிசீலனைக்கு எவ்வளவு காலம் எடுக்கும்?**

ஒவ்வொரு வழக்கும் வெவ்வேறானது என்பதால், இதற்கு எவ்வளவு காலமாகும் என்று சொல்வது கடினம். பெரும்பான்மையான மீள்பரிசீலனைகளை ஆறு வாரங்களுக்குள்ளாக முடிக்கும் நோக்கத்தில் IAA இருக்கிறது; இருப்பினும், மீள்பரிசீலனைக்கான காலம் பல விதப்பட்ட காரணிகளைப் பொறுத்து அமையலாம்.

**என்னுடைய வழக்கைப் பற்றிய எந்தெந்த தகவல்கள் IAA-விடம் இருக்கும்?**

உங்களுடைய விவகாரத்திற்குப் பொருத்தமானது என்று திணைக்களம் கருதும் அனைத்து ஆவணங்களையும் திணைக்களம் IAA-வுக்குக் கொடுக்கும். பாதுகாப்பு விசா விண்ணப்பம் சம்பந்தமாக நீங்கள் திணைக்களத்திற்குக் கொடுத்த எந்த ஆவணங்களையும் இது உள்ளடக்கும். பொதுவாக, திணைக்களத்தினால் கொடுக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் மட்டுமே நாங்கள் திணைக்களத்தின் முடிவினைப் பரிசீலிப்போம்.

**IAA-விற்கு என்னால் புதிய தகவல்களைக் கொடுக்க இயலுமா?**

புதிய தகவல்களைக் கருத்தில் கொள்ளவேண்டும் என்பதை நியாயப்படுத்தக்கூடிய தவிர்க்கவியலாத சூழ்நிலைகளில் மட்டுமே புதிய தகவல்களை எம்மால் கருத்தில் கொள்ள இயலும். பொருத்தமான, மற்றும் திணைக்களம் தனது முடிவினை மேற்கொண்டபோது அதன் முன்பு இல்லாதிருந்த தகவல்களே புதிய தகவல்களாகக் கருதப்படும்.

நாங்கள் கருத்தில் கொள்ள வேண்டும் என்று நீங்கள் விரும்பும் புதிய தகவல்கள் இருந்தால், பின் வரும் விளக்கங்களையும் நீங்கள் கொடுத்தாக வேண்டும்:

- பாதுகாப்பு விசாவிற்கு மறுப்புத் தெரிவித்து திணைக்களம் முடிவு எடுத்ததற்கு முன்பாக இந்தத் தகவலை ஏன் உங்களால் கொடுக்க இயலாமல் போனது என்ற விளக்கம், அல்லது
- இந்தத் தகவல் உங்களைப் பற்றிய நம்பத் தகுந்த தகவல் என்பதற்கும், இந்தத் தகவல் திணைக்களத்திற்கு ஏற்கனவே தெரிந்திருந்தால், திணைக்களத்தின் முடிவு வேறு மாதிரியாக இருந்திருக்கலாம் என்பதற்கும் நீங்கள் தரும் விளக்கம்.

இந்த விளக்கம் 5 பக்கங்களுக்கு மேல் இருக்கக் கூடாது மற்றும் நீங்கள் எமக்குத் தரும் ஏதாவது புதிய தகவலுடன் சேர்க்கப்பட வேண்டும். .

தயவு செய்து கவனிக்கவும்:

• புதிய தகவல் உங்களுடைய வழக்குடன் தொடர்புடையது ஏன் என்பதை நீங்கள் விளக்க வேண்டும்.

• உங்கள் நாட்டில் ஊடக அறிக்கைகள் அல்லது அறிக்கைகள் பற்றி நீங்கள் குறிப்பிட்டால், நீங்கள் அறிக்கையின் ஆதாரத்தை அடையாளம் காண வேண்டும்.

• நீங்கள் ஒரு அறிக்கையின் நகலையோ அல்லது உரிய ஆவணங்களையோ கூட வழங்க வேண்டும். பகிரங்கமாக கிடைக்கும் அறிக்கைகளின் பட்டியல்கள் அல்லது பகிரங்கமாக கிடைக்கும் அறிக்கைகளி ஹைபர்லின்குகள் நாங்கள் ஏற்க மாட்டோம்.

• ஆங்கிலத்தில் இல்லாத எங்களுக்கு அனுப்பும் எந்த ஆவணங்களுடனும் NAATI அங்கீகாரம் பெற்ற மொழிபெயர்ப்பாளரின் ஆங்கில மொழிபெயர்ப்பு சேர்ந்து கொள்ள வேண்டும். ஒரு மொழிபெயர்ப்பு வழங்கப்படவில்லை எனில், ஆவணத்தை நாம் பரிசீலிக்க இயலாது.

உங்கள் வழக்கு திணைக்களத்தினால் எமக்குப் பரிந்துரைக்கப்பட்ட 21 நாட்களுக்குள்ளாக நாங்கள் கேட்காத எவ்வொரு புதிய தகவலும் கொடுக்கப்பட வேண்டும்.

மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட சூழ்நிலைகளில், எழுத்து மூலமாக அல்லது நேர்காணல் ஒன்றின் மூலமாக புதிய தகவல்கள் அல்லது கருத்துரையை எமக்குக் கொடுக்க நாங்கள் உங்களை அழைப்போம்.

### IAA-வுக்கு நான் சமர்ப்பணம் ஒன்றை அளிக்க இயலுமா?

எழுத்துமூலமான சமர்ப்பணம் ஒன்றை நீங்கள் அளிக்கலாம்:

- திணைக்களத்தின் முடிவில் உங்களுக்கு ஏன் சம்மதம் இல்லை என்பதைப் பற்றி, மற்றும்
- நீங்கள் திணைக்களத்திற்குக் கொடுத்திருந்து, கருத்தில் கொள்ளப்படாத கோரிக்கை அல்லது விடயம் எதுவுமிருந்தால் அதைப் பற்றி.

உங்கள் சமர்ப்பணம் சுருக்கமாக இருக்க வேண்டும். அது 5 பக்கங்களுக்கு மேல் இருக்கக் கூடாது, மற்றும் உங்கள் வழக்கு திணைக்களத்தினால் எமக்குப் பரிந்துரைக்கப்பட்ட 21 நாட்களுக்குள்ளாக அளிக்கப்பட வேண்டும்.

### IAA-விடம் உள்ள தகவல்களை என்னால் அணுக இயலுமா?

சில வரையறைகளுக்குட்பட்டு, IAA-விடம் உள்ள உங்களது வழக்கைப் பற்றியஎவ்வொரு ஆவணங்களையும் அணுக வேண்டுமென நீங்கள் *தகவல் சுதந்திர சட்டம் 1982*-இன் கீழ் வேண்டுகோள் விடுக்கலாம். சில தகவல்களை எம்மால் வெளிப்படுத்த இயலாது என்றால், ஏன் என்று நாங்கள் உங்களுக்கு அறியத்தருவோம். எவ்வொரு ஆவணங்களையும் அணுக மறுப்புத் தெரிவித்து நாங்கள் எடுத்த முடிவினை மறுபரிசீலனை செய்யுமாறு நீங்கள் எப்படி வேண்டலாம் என்று நாங்கள் உங்களுக்கு அறிவுரைப்போம். தகவல் அணுகலைப் பற்றிய மேலதிக விவரங்களை www.iaa.gov.au எனும் எமது வலைத்தளத்தில் காணலாம்.

### IAA என்னுடன் எப்படித் தொடர்புகொள்ளும்?

பொதுவாக IAA உங்களுடன் மின்னஞ்சல் மூலம் தொடர்புகொள்ளும். தொலைபேசி மூலமாகவும் நாங்கள் உங்களுடன் தொடர்புகொள்ளக்கூடும்.

கடிதப் போக்குவரத்துகள் உங்களுக்கு அனுப்பப்பட வேண்டும் என்ற தெரிவினையும் நீங்கள் மேற்கொள்ளலாம், அல்லது உங்கள் சார்பாகக் கடிதங்களைப் பெற ஒரு நபரையும் நீங்கள்

நியமிக்கலாம் (இந்த நபர் உங்களுடைய ‘அதிகாரம் பெற்ற பெறுனர்’ எனப்படுவார்). அதிகாரம் பெற்ற பெறுனர் ஒருவரை நீங்கள் நியமித்தால், அனைத்துக் கடிதப் போக்குவரத்துகளையும் நாங்கள் அவர்களுக்கு அனுப்புவோம்.

திணைக்களத்திடமிருந்து கடிதப் போக்குவரத்தைப் பெற நீங்கள் இன்னொரு நபரை நியமித்திருந்தால், IAA-மீள்பரிசீலனைக்கு அந்த நியமனம் செல்லாது. எமது கடிதப் போக்குவரத்தினை இன்னொரு நபர் பெறவேண்டுமெனெ நீங்கள் விரும்பினால், அவருடைய பெயர் மற்றும் தொடர்பு விவரங்களை நீங்கள் எமக்கு அறிவிக்க வேண்டும்.

உங்களுடைய தொடர்பு விவரங்களில் மாற்றங்கள் எதுவும் இருந்தாலோ, அல்லது உங்களுடைய அதிகாரமளிக்கப்பட்ட பெறுனர் ஒருவர் இருந்து அவரது தொடர்பு விவரங்களில் மாற்றங்கள் ஏற்பட்டிருந்தாலோ அதை நீங்கள் எமக்கு உடனடியாக அறிவிக்க வேண்டும். எவ்வொரு மாற்றத்தைக் குறித்தும் உங்களது அதிகாரமளிக்கப்பட்ட பெறுனருக்கும் (உங்களுக்கு ஒருவர் இருந்தால்), திணைக்களத்திற்கும் நீங்கள் தெரிவிக்க வேண்டும் .

iaa@iaa.gov.au எனும் மின்னஞ்சல் மூலமாக, அல்லது 1800 205 919 எனும் தொலைபேசி மூலமாக நீங்கள் எம்முடன் தொடர்புகொள்ளலாம்.

**அறிவுரை, ஒத்தாசை மற்றும் பிரதிநிதித்துவம்**

தொழில்வல்லமை ரீதியான அறிவுரை அல்லது ஒத்தாசை உங்களுக்குக் கிடைத்திருக்கிறதா என்பதைப் பொறுத்து முடிவுகள் இல்லாத வகையில் IAA-யினது செயல்பாட்டு முறைகள் எளிமையாக வடிவமைக்கப்பட்டுள்ளன. இருந்தாலும், பலதரப்பட்ட அமைப்புக்கள் மற்றும் தனிப்பட்ட நபர்களிடமிருந்து நீங்கள் அறிவுரையையும் ஒத்தாசையையும் நாடலாம். சேவை வழங்குநர் எவரையும் நாங்கள் வழிமொழிவதில்லை அல்லது சிபாரிசு செய்வதில்லை. யாரொருவரையும் தெரிவு செய்யும்போது நீங்கள் சாக்கிரதையாக இருக்கவேண்டும், மற்று அந்த நபர் பதிவு பெற்ற புலப்பெயர்வு முகவரா, ஒரு ஆஸ்திரேலிய சட்ட வழக்குரைஞரா அல்லது மற்றபடி சட்டப்பிரகாரம் அவரால் உங்களுக்கு உதவ இயலுமா என்றும் நீங்கள் அவரிடம் கேட்க வேண்டும்.

பல மொழிகளில் கிடைக்கும் தகவல்கள் உள்ளடங்க, புலப்பெயர்வு முகவர் ஒருவரைக் கண்டெடுப்பது மற்றும் அவரைப் பயன்படுத்துவது ஆகியன குறித்த தகவல்கள் புலப்பெயர்வு முகவர்கள் பதிவு ஆணைய அலுவலகத்தினரது வலைத்தளத்தில் (www.mara.gov.au) உள்ளன. குறிப்பிட்ட புலப்பெயர்வு முகவர் ஒருவர் பதிவு பெற்றவரா என்றும் நீங்கள் இந்த வலைத்தளத்தில் சோதிக்கலாம்.

ஆஸ்திரேலிய சட்ட வழக்குரைஞரைக் கண்டுபிடித்து பயன்படுத்துவது பற்றிய தகவல்கள் எங்கள் வலைத்தளத்தில் (www.iaa.gov.au) பட்டியலிடப்பட்ட தொடர்புடைய மாநில மற்றும் பிராந்திய சட்ட தொழில்வல்லுநர் ஒழுங்குமுறை அதிகாரிகளிடமிருந்து கிடைக்கும்.

நீங்கள் IAA-வுடன் மேற்கொள்ளும் காரியங்களில் உங்கள் சார்பாக இன்னொரு நபர் செயல்படலாம். பிரதிநிதி ஒருவர் உங்கள் சார்பாக எம்முடன் தொடர்புகொண்டு நாங்கள் வைத்துள்ள உங்கள் வழக்ககுக்கு சம்பந்தப்பட்ட ஆவணங்களை அணுகுவதற்கான வேண்டுகோளை விடுக்கலாம். பொதுவாக, ஒரே நபரே பிரதிநிதியாகவும், அதிகாரம் பெற்றுள்ள பெறுனராகவும் நியமிக்கப்படுவார். உங்களுக்கென பிரதிநிதி ஒருவர் இருந்தால் நீங்கள் எமக்கு உடனடியாகத் தெரிவிக்க வேண்டும்.

**நான் முறைப்பாடு செய்ய வேண்டும் என்றால் எப்படி?**

IAA-வினால் அளிக்கப்படும் சேவையின் தரத்தைப் பற்றிய கருத்துரை அல்லது முறைப்பாடு உங்களுக்கு இருந்தால், முறைப்பாடு ஒன்றை எப்படிச் செய்வது என்பதின் அறிவுறுத்தல்களுக்காக தயவு செய்து எமது வலைத்தளத்தினைப் பாருங்கள் (www.iaa.gov.au).